# JANAVINODINI.

# ஜநவிநோதிநி.

இல. 3.] மார்ச்சி மீ" 1888. [புஸ்த. XIX.


CONTENTS.


Agriculture ........................ 49
A wonderful Phenomenon of the Brain.................................. 53
Time and its Measurement...... 54
The Merchant and his Money... 58
The physical features of the Sun.................................. 64
What is Charity?................. 69


அட்டவணை.


விவசாயம் ................................ 49
மூளையின் ஓர்வித விசித்திரம்......... 53
காலமும் அதை அளக்குங் கருவிகளும் ........................................ 54
வணிகனும் அவன் பொருளும்......... 58
சூரிய பிம்பலட்சணம்.................. 64
தருமம் என்பது யாது?............... 69



MADRAS.

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

# ஜநவிநோதிநி.

இல. 3.] மார்ச்சி மீ 1888. [புஸ்த. XIX.

## விவசாயம்.

பெறுதற்கரிய மானிடப் பிறவியைப்பெற்ற ஆன்மவர்க்கங்கள் இவ்வுலகத்தில் உயிர்வாழ்ந்து சுகிப்பதற்கேற்ற தொழில்கள் பலவற்றுள்ளும் விவசாயமே சிறந்தது. அதற்கு அறிஞர் உழவு என்னும் பெயரிட்டிருக்கின்றனர். உழவு என்பதற்கு வருந்திமுயலுதல் என்பது பதப்பொருள். ஏர் உழுதல், பரம்படித்தல், நிலந்திருத்தல், புழுதியாக்கல், சேடைசெய்தல், விதை விதைத்தல், நாறு நடுதல், நீர்பாய்ச்சல், களைகட்டல், ஓம்புதல், விளைவறுத்தல், போர்வேய்தல், பிணையடித்தல், சேர்த்தல், பாத்தல் என்னும் பலவகைத்தொழில்களும் விவசாயத்துக்கு உறுப்பாக அமைந்திருக்கின்றபடியாலும், இத்தொழில்கள் பலவற்றிற்கும் வருந்திமுயலுதல் அத்தியாவசியமானபடியாலும் விவசாயத்துக்கு உழவு என்னும் பொதுப்பெயரை மேலோரிட்டு வழங்கினார்கள்.

எவ்வகைப்பட்டதொழிலில் நாம் பிரவர்த்தித்து எவ்வகைப்பட்ட பெருஞ்சம்பத்தை வரையாது பெற்றோமாயினும்,

"எல்லாம் யோசிக்கும் வேளையிற் பசிதீரவுண்பது முறங்குவதுமாகமுடியும்."

என்று ஆன்றோர்கூறியபடி, தேக உபாதைகளுள் விடுதற்கரியதாயுள்ள பசி தீர உண்டுசுகித்தலே அச்செல்வத்தின் பெரும்பயனென்பதற்கு ஐயமில்லை. ஒருவனுடைய பசியை நோய்த்தணிக்கும் ஆற்றல் பெருஞ்செல்வத்துக்கு எவ்வளவுமின்று. அப்பசியைத் தணிக்கத்தக்கன பூமியில் விளையத்தக்க தானியவகைகள் முதலியனவன்றிப் பிறிதன்று. பசியென்னும் தேக உபாதையை நோய் நீக்கத்தக்க உழவுத் தொழிலை விடுத்துப் பிற தொழில்களிலெல்லாம் ஒருவன் மெய்வருந்தி உழலுவது நெற்குத்தி உண்ணாது உமிக்குத்திக்கையிளைத்தலையும், கறவைப்பசுவிருக்க மலட்டுப் பசுவைக்கறந்து எய்த்தலையும், கரும்பிருக்க

இரும்புகடித்தலைவதையும், விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்து எக்கமுறுவதையும் ஒக்கும். இந்த விஷயத்தைக்குறித்து இவ்வளவு தூரம் வற்புறுத்திக்கூறுவது எவ்வளவும் உபசாரத்தினலன்று.

மனிதன் ஆதியில் காய், கனி, கிழங்கு முதலியவற்றைப் புசித்துக்கொண்டேவருகையில் அவை தன்னுடைய உணவுக்குப் போதாமையைக் கண்டவிடத்து அவன் அவற்றை உண்டாக்கிக்கொள்ள வேண்டுமென்னும் எண்ணங்கொண்டவனுகி நிலத்தைப் பண்படுத்தத் தொடங்கினன். இவ்வாறு உழவுத்தொழிலில் பிரவேசிக்கத் தலைப்பட்டவன் கலப்பை செய்வதற்காக மரத்தை வெட்டுதற்குரிய கோடரி, கொழு, சால், ஏற்றம்முதலிய சகல உபகரணங்களையுந் தேடவேண்டியதாயிற்று. ஆகவே உழவுத்தொழிலே ஆதியில் பஞ்ச உலோகங்கள் முதல் சகலபொருள்களையும் மனிதர்கள் தேடுவதற்கும், ஏனைய தொழில்களைப் புரிவதற்கும் காரணமாயிருந்தது. உலகத்தில் பகுத்தறிவு பெற்ற ஆன்மவர்க்கங்களாகிய மானிடர் செய்யுந் தொழில்கள் யாவும் உடலும் உயிரும் ஒன்றுபட்டிருக்கும் வரையில் சுகித்துவாழ்வதற்கேயாகையாலும், உழவுத்தொழிலொன்றே அவற்றுள் சிறந்ததாகையாலும் அவ்வொன்றுக்கே ஏனைய யாவும் உபகரணமாயிருக்க வேண்டியது இயல்புதானே. பிரிதிவுலட்சண சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம், தாவரலட்சணசாஸ்திரம், விலங்குலட்சண சாஸ்திரம், வானசாஸ்திரமுதலிய சகல சாஸ்திரங்களும் மற்றுமுள்ள பூதபௌதிக சாஸ்திரங்கள் யாவும் விவசாய சாஸ்திரம் ஒன்றுக்கே பெருங்கருவியாயிருக்கின்றன. ஒருவன் நிலத்தைத்தகுந்தபடி பண்படுத்தி அதனலாகிய பயனைப் பூரணமாயடைய வேண்டுமானல் மேற்கண்ட இத்தனை சாஸ்திரங்களின் உணர்ச்சியைப் பெற்றிருக்கவேண்டியது அத்தியாவசியம். தற்காலத்தில் அமெரிகா - இங்கிலாந்துமுதலிய பிரதேசங்களில் உழவர்களாயிருப்பவர்கள் மேற்கண்ட சாஸ்திரங்களில் மஹா பண்டிதர்களாயிருக்கிறார்கள். ஆகையாற்றான் அவ்விடங்களில் உழவு அவமானமாகிய தொழிலென்று திரஸ்காரஞ் செய்யப்படவில்லை. இந்தியாவிலே சிலகாலமாய்ப் பண்ணையாள்களென்று பெயர்பெற்ற விவேக சூனியர்களே பெரும்பாலும் உழவுத்தொழிலைக் கையாண்டுவருகிறார்களாகையால் அந்தத்தொழில் அவிவேகிக்கேயுரியதோர் தாழ்ந்த தொழிலென்று இந்துக்களுக்குள் பெரும்பான்மையோர் மதிமயக்கத்தினல் கருதுவதற்கிடமிருக்கிறது.

இந்தியாவுக்கு ஆதியில் வந்த பெருமைக்கெல்லாம் குடிகள் உழவுத் தொழிலை விசேஷமாகக் கொண்டதே முக்கிய காரணமென்பதையும், இப்போது அதற்கு நேரிட்ட சிறுமைக்கெல்லாம் அவ்வுழவுத்தொழிலைக் குடிகள் திரஸ்காரஞ்செய்வதே முக்கிய காரணமென்பதையும் ஒருவரும் மறுக்கார். இந்தியாவில் இப்போது விவசாயத்தை அலட்சியஞ்செய்து அதை அவமானமாகிய தொழிலென்று நினைப்பவர்கள் தங்களுடைய இந்துதேசத்தின் புராதன நிலைமையை அறியப்பெறாதவர்கள். தம்முன்னோராகிய மேலோர் உழவுத் தொழிலைக்குறித்து வியந்துரைத்த அற்புத வசனங்களை அவர்கள் அறியார்போலும்.

"பூமி திருத்தி யுண்." "சினைத்தேடினேனைத்தேடு." "உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர்பணிக்கு." என்றும்,

"சுழன்று மேர்ப்பின்ன துலகமதனு
லுழந்து முழவேதலை."

(உலகத்தார் உழவால் வரும் வருத்தமுதலியவற்றிற்கஞ்சி வேறுவேறுதொழில்களிற் பிரவர்த்தித்துத்திரிந்தும் அவையெல்லாம் நிலையான பயனைத்தராமையினுல் கடைசியாக உழவர்கள் பின்செல்லவேண்டியதாய் நேரிடுகிற காரணத்தினுலே உலகத்திலுள்ள எல்லாத் தொழில்களிலும் சிறந்தது உழவே) என்றும் மேலோர் கூறிய அமுதவாக்குகாலத்திரயத்தும் பொய்யாகாது. உலகத்திலுள்ளபற்பலதேசசரித்திரத்தைச் சற்றே நிதானித்துப்பார்ப்போம். வெனிஸ்-ஜினேவா-போர்ட்சுகல்-ஸ்பெயின்முதலிய தேசங்கள் தத்தம் காலமுறையிலே வர்த்தக முயற்சிகளினுல் மஹா பிரசித்தியடைந்திருந்தன. இப்போது அவற்றின் செல்வமும் பெருமையும் எங்குபோயின? அத்தேசத்தவர்கள்-தம்மைவிட வர்த்தகத்தில் அதிக முயற்சியும் கால அநுகூலமும் எய்தப்பெற்ற வேறு தேசத்தவர்கள் ஓங்க ஓங்க, மெல்லமெல்ல நாளாவர்த்தியில் க்ஷீணித்துப்போய்விட்டார்கள். விவசாயத்தில் அந்தத் தேசவாசிகளுக்குச் சிரத்தையில்லாமற்போனதே அவர்களுடைய க்ஷீணத்துக்குக்காரணம். உலக முழுவதையும் தன்னடிப்படுத்தித்தனியரசாண்டுவந்த உரோமாபுரி விவசாயத்தில் நாட்டம்வைத்து அதனை அபிவிருத்தி செய்துகொண்டு வந்தவரையில் அது செழித்தோங்கிக்கொண்டேவந்தது. அவ்வற்புதத்தொழிலை அசட்டைசெய்து வேறுவகைகளினுல் பொருள் - கீர்த்தி முதலியவற்றை யீட்டத்தலைப்பட்டது முதல் அது தேய்பிறைபோல் க்ஷீணித்தது. குடி ஜனங்க

ளுக்கு விவசாயத்தின் அருமையினையும் ஆவசியகத்தினையுங்காட்டி அதில் அவர்களைமுயலுவிக்கக் கருதியே இப்போதும் வருஷத்துக் கொருதடவை சீனுதேசத்துச் சக்கிரவர்த்தியார் தாமே கலப்பையைப் பற்றி நிலத்தைச் சிறிது நேரம் உழுகின்றாராம். இங்கிலாந்து தேசத்தவர்கள் நெடுங்காலம் வரையில் பயிர்த் தொழிலின் அருமைப்பாட்டையறியாதவர்களாயிருந்தார்கள். 1790-ம் வருஷத்தில் விவசாய அபிவிருத்திக்காக ஓர்சங்கம்அங்கு ஸ்தாபிக்கப்பட்டது. வானசாஸ்திரிகளும் ரசாயனசாஸ்திரிகளும் தாவரசாஸ்திரிகளும் பிரிதிவுலட்சணசாஸ்திரிகளும் மற்றுமுள்ளபூதபௌதிகசாஸ்திரிகளும் அச்சங்கத்தைச் சேர்ந்து தத்தம்சாஸ்திர உணர்ச்சியினால் விவசாயத்தில் பயிலத் தலைப்பட்டார்கள். விவசாய சாஸ்திரத்துக்கு மேற்கண்ட அத்தனை சாஸ்திரங்களும் அனலுக்குவெப்பத்தைப் போலவும், நீருக்குத் தண்மையைப் போலவும், பூவுக்குமணத்தைப்போலவும் ஒற்றுமையாயிருக்கும் விசித்திரத்தைக் கண்டு அந்த சாஸ்திரிகள் யாவரும் வியந்தார்கள்.

இவ்வுண்மையை யறியாக் கொடுமையினாலல்லவோ விவசாயத்தைக்கேவலம் மந்தமதிகளின் தொழிலென்றுசிலர் மயங்குகிறார்கள். அமெரிகா கண்டத்தில் பிரபுக்களென்று பெயர்பெற்றிருக்கிறவர்களுக்குள்பெரும்பான்மையோர் உழவர்களேயாம். நீராவி எந்திரங்களைக்கொண்டும் திவ்வியமான குதிரைகளைக் கொண்டும் மற்றும் பற்பல விலையுயர்ந்த உபகரணங்களைக் கொண்டும் அங்கு நடத்தப்படும் உழவுத்தொழிலின் விசித்திரவேலைப்பாட்டின் காட்சியைக்காணப்பெற்றோர் காலத்திரயத்தும் உழவுத் தொழிலைக்கனவிலும் இகழார். அவ்வற்புதக் காட்சியைக் கண்டுகளிக்கப்பெற்றவர்கள் பிரிதிவு முதலாய ஐம்பெரும் பூதங்களும் பஞ்ச உலோகங்களும் தாவர வஸ்துக்களும் உலகத்திலுள்ள ஏனையதொழில்களும் உழவுத்தொழில் செய்துவரும் கிருஷிகனுடையஏவற்பணிவிடைகளைச் செய்துகொண்டுகிடப்பதையும், உலகத்திலுள்ள மற்றெல்லாத் தொழில்களைக் காட்டிலும் "உழவேதலை" என்றபடி உழவே மகா கௌரவமான தென்பதையும், அதுவே ஸ்வயேச்சையான வாழ்க்கையென்னும் புதல்வனை அருமையாகவளர்த்தெடுக்கும் செவிலித்தா யென்பதையும் கண்கூடாகக் காணலாம். இதுவரையில் விவசாயத்தைக்குறித்துப் பொதுவாய்க் கூறிமுடித்தோம். இனி இந்தியாவின் புராதன தற்கால விவசாய அபிவிருத்தி விஷயத்தைக் குறித்து மறுசஞ்சிகையில் விரித்துரைப்போம்.

(இன்னும் வரும்.)

## மூளையின் ஓர்வித விசித்திரம்.

மத்தியதரைக் கடலில் நேரிட்டிருந்த ஓர்கப்பற்சண்டையிலே அதிவீராவேசத்துடன் போர்புரிந்து கொண்டிருந்த ஒருவன் சிரசில் குண்டு ஒன்று தாக்கியது. உடனே அவன் பிரக்ஞையற்றுக் கீழே விழுந்தனன். பிராணன் முற்றும் நீங்கிய பிரேதம்போல் அவனிருந்திருப்பானாயின் அவனை உடனே அடக்கஞ்செய்ய நாவாய்களிலிருந்தவர்கள் பிரயத்தனப்பட்டேயிருப்பார்கள். சுவாசப்பை, இரத்தாசயப்பை முதலியவற்றின் இயக்கக்குறிகள் வெளியே காணப்பட்டபடியால் அவனை அங்கிருந்த இராணுவ வைத்தியபரிசிலகர்கள் ஜிப்ரால்டருக்கு அனுப்பினார்கள். அவ்விடத்தில் தேகதத்துவ சாஸ்திரத்திலே மிகவும்பாண்டித்தியம்பெற்ற சிலவைத்தியர்கள் பலவாறுகமுயன்றும் அவன் அதேஸ்திதியிலிருந்தான். பிறகு அப்பிணியாளனை வைத்தியபரிசிலகர்கள் இங்கிலாந்துக்கு அனுப்பினார்கள். அவ்விடத்திலே சிலமாதம்வரையில் சரீர அங்கதருமங்கள் மாத்திரம் இயங்கிக்கொண்டிருந்தும் அவன் பிரக்கினைதப்பின நிலையிலேயே இருந்தான். இந்நிலைமையிலேயே ஒருவருஷத்துக்குமேற்பட்டு அவனிருந்தும் எவ்வகைப்பட்டசிகிச்சையும் அவன்விஷயத்தில்பயன்பட்டிலது. இந்தப்படியிருக்கையில் கபாலலட்சணவித்தையிலே அதிகபாண்டித்தியமடைந்து நுட்பபுத்தியமையப்பெற்ற இரணவைத்தியர் ஒருவர் அப்பிணியாளியின் கபாலத்தைச் சோதித்துப் பார்க்கையில் அவனுடைய மூளையில் ஓர்எலும்புத்துண்டு அழுந்திக்கிடந்ததைக் கண்டார். அவர் அதனை அதற்கேற்ற இரணவைத்தியக் கருவியைக் கொண்டு மெல்லத்தூக்கிவிட்டவுடனே அவனுக்குப் பிரக்கினைவந்தது. அப்போது அருகிலிருந்த யாவரும் வியக்கத்தக்க அற்புதம் ஒன்று நிகழ்ந்தது. மேற்கண்டபடி அப்பிணியாளியின் கபாலத்தில்குண்டுதாக்கியபோது அவன்தன்கூட்டாளி ஒருவனைநோக்கிச் சத்துருக்களின் மரக்கலங்களில் சிலவற்றைப்பிடிப்பதற்கேற்ற வழிவகைகளைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தான். அவன் வசனித்துக் கொண்டிருந்த வாக்கியத்தைப் பூர்த்திசெய்வதற்குமுன்னர் இடையில் குண்டுதாக்கியகாரணத்தால் அவனுடைய மூளைக்குப் பங்கம் நேரிட்டபடியினாலே அவ்வாக்கியம் முடிவுபெறாமல் அம்மட்டிலேயேநின்றிருந்தது; மூளையை அழுத்திக்கொண்டிருந்த எலும்புத்துண்டு மேற்கண்டபடிஎடுபடவும், அப்பிணியாளி அவ்வாக்கியத்தின் எஞ்சியபாகத்தைச் சொல்லி

முடித்தான். அவ்வாக்கியத்திலெஞ்சிநின்ற பாகம் அவன் வாய் விட்டு வெளிப்பட்டதுதான் பிரக்கினைவந்தவுடனே அவனிடத் துண்டாகிய முதற்செய்கை. இதையாவரும் வியந்தார்கள். இடையில் ஒருவருஷத்துக்குமேற்பட்டுக் காலங்கழிந்ததைக்குறித்தும், அவனுடையதேகத்துக்குவிளைந்தனவற்றைக் குறித்தும் அவனொன்றும் அறிந்திலன். இடையில்விட்டுப் போனவாக்கியத்தை முடிக்குந்தொழிலையுடைய மூளைநரம்புகள் விட்டகுறையை ஒருவருஷமாகியும் மறவாதிருந்தது ஆச்சரியம்.

சரீரத்தைச் சார்ந்த ஏனைய அங்கங்கள் எவ்வளவு நன்குய் இயங்கிக் கொண்டிருந்தாலும் சகலதோற்றங்களுக்கும் உணர்ச்சிக்கும் மூலாதார பீடமாகிய மூளைமாத்திரம் நல்ல ஸ்திதியிலிராவிடில் மனிதன் பிரேதத்துக்குச் சமானமாவான். மனிதனுடைய மனோதத்துவ இயக்கத்துக்கு மூளை இன்றியமையாத தாயிருக்கிற காரணத்தைப்பற்றியே சிலர் ஆன்மாவே மூளையென்றும் மூளையே ஆன்மாவென்றும்மயங்குகிறார்கள். தேகத்தின் பற்பல அவயவங்களை இயக்குவதற்கும், பிற பதார்த்தங்களின் இலட்சணங்களை மெய் வாய் கண் மூக்குச் செவி மூலமாய் உணருவதற்கும் ஆன்மாவுக்குத் தனிப்பெருங் கருவியாயிருப்பது மூளை ஒன்றேயாம். அத்தகுதிய தனித்துணையாகிய மூளை க்ஷீணித்த விடத்துச் சூட்சும ரூபமாயுள்ள ஆன்மா என்செயற்பாலது? சூரியதோர் வாளோடு போர்புரிந்துவரும் ஒருவன் ஏதோகாரணத்தினால் நிராயுதபாணியாய் நின்ற காலத்து முன்போல் பூரண ஆற்றலையுடையவனாயிராத காரணத்தினாலும், அவனிடத்து ஆயுதமிராத காரணத்தினாலுமே முதலாளியையே இல்லையென்றுசொல்லுதல் பொருந்துமா? எவ்வளவும்பொருந்தாது. அதுபோல் மூளையென்னுந் தனிப் பெருங்கருவி எந்த ஹேதுவினாலாவது க்ஷீணித்தகாரணத்தினாலும், அதனால் ஆன்மாவுக்கு ஆற்றல் குறைந்த காரணத்தினாலுமே ஆன்மா என்னுமொரு முதலில்லை யென்று வாதிப்பது தருமமாகாது. மேலெடுத்துரைக்கப்பட்ட பிணியாளியின் சரித்திரமே இதற்குச் சாட்சி பகரத்தக்கது.

## காலமும் அதை அளக்குங் கருவிகளும்.

உலகத்திலுள்ள எவ்வகைப்பட்ட அருமையான பதார்த்தங்களையும் நாம் நேரில் அடையாவிடினும் கண்கூடாகக் காணாவிடினும் ஒரு

வாறுக மனதினுல் யூகித்தறிவதற்குச் சாத்தியமாயிருத்தல் கூடும். காலம் என்னும் பொருளினிடத்து ஓர்விசித்திரமிருக்கிறது. அதை அறிவது மானிடமனோதத்துவலட்சணத்துக்கு எட்டாச் செய்கையா யிருக்கிறது. உலகத்தில் ஒவ்வொரு பதார்த்தமும் ஒரு ஆதியையும் ஒரு அந்தத்தையும் உடையது. காலமோ ஒரு ஆதியையாவது அந்தத் தையாவது உடைத்தாயிருக்கிறதென்பதை மனதினுல் நினைக்கவும் நமக்குச் சாத்தியமாயில்லை. இன்னசமயத்தில் காலம் என்னும் பொ ருள் ஆரம்பித்தது, இன்னசமயத்தில் அது போய்முடியும் என்று நாம் ஒரு கணக்கிட்டுக்கூறுவோமாயின் அந்த சமயத்துக்குமுன் காலமில்லை யோ? அந்த சமயத்துக்குப் பின் காலமிராதோ? என்னும் வினவைச் சிறுகுழந்தையும்கேட்கும்; ஆகவே காலத்துக்கு ஆதியந்தத்தை ஏற் படுத்துவது மானிட மனோதத்துவலட்சணத்துக்கு எவ்வளவும் இ சையாதசெய்கை. ஆதியந்தமற்றதாய் என்றைக்குமுள்ளதான பொ ருளாகக் காலத்தை யூகித்துப்பார்ப்போமென்றால் அதுவும் மகா நுட் பபுத்தியுடையவனுடைய மனோதத்துவத்துக்கும் எட்டாதவிஷய மாயிருக்கிறது. இது என்னவிசித்திரம்! ஆதியந்தம் உள்ளதாகவும் ஆதியந்தம் அற்றதாகவும் கருத மனோதத்துவத்துக்கு எட்டாத அரு மையான லட்சணமுடைய பொருள் காலமென்னும் ஒன்றேயல்ல. அதற்குத்துணை மற்றொன்றுண்டு. அது வெளிப்பரப்பு. மேற்காட் டிய லட்சணத்தைக் காலத்தைப்போலவே வெளிப்பரப்பென்னும் பொருளும்பெற்றிருக்கிறது. மனோதத்துவலட்சண சாஸ்திரத்தில் இவ்விரண்டுபொருள்களும் அதிவிசித்திரமானவைகளென்று கூறப் பட்டிருக்கின்றன. காலம் ஆதியந்த மற்ற பொருளாயிருக்கிறபடியி னுல் அதையே கடவுளென்றுகூறும் காலமதவாதிகள் என்னும் ஒரு விதசித்தாந்திகள் உளர். அதுநிற்க.

மானிடர் உலகத்தில் பற்பலகாரியங்களில் பிரவர்த்திப்பதற்குக் கால அளவைகள் அத்தியாவசியமாக வேண்டியிருக்கிறபடியினுல் ஆதி யிலேயே மனிதர்கள் தங்களுடைய கல்வி-ஆராய்ச்சி-புத்தி இவற்றிற் கேற்றபடி பற்பல கால அளவைகளை ஏற்படுத்தியிருந்தார்கள். சூரி யன் உதயமாவதையும் அஸ்தமிப்பதையும் வரையறைகளாக ஏற்ப டுத்தி ஜனங்கள் ஆதியில் நாள்களைக் கணக்கிட்டுவந்தார்கள். பிறகு ஒரு நாளையில் செய்துமுடிக்கவேண்டிய பற்பல வேலைகளுக்கு ஏற்ற பற்பல கால அளவைகளை ஏற்படுத்தவேண்டிய அவசியம் நேரிட்டது.

காலை-மத்தியானம்-மாலை என்னும் மூன்றுபிரிவுகள் தவிரவேறே கால அளவைகள் அவர்களுக்குத்தோன்றவில்லை. ஆராய்ச்சியினால் நாளா வர்த்தியில் புத்திவிசாலப்பட விசாலப்பட, பகற்காலத்திலே ஆகாயத்தில் கிழ்த்திசையிலிருந்து மேற்றிசைக்குச் சூரியன் இயங்கிவருவதற்கு ஏற்றபடி விருட்சங்கள் முதலியவற்றின் நிழல் நீளுவதையும் குறுகுவதையும் அவர்கள் கண்டபோது அதையே ஆதாரமாகக்கொண்டு சூரிய நிழற்கடிகாரங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். இதை ஆதியில் கண்டுபிடித்தவர்கள் எகிப்து (ஈஜிப்ட்டு) தேசத்தவர்களென்று தோன்றுகிறது. கோடைகாலத்தில் பகற்காலப்பொழுது நீடித்தும் மாரிகாலத்தில் குறைந்துமிருக்கிறகாரணத்தினாலும், மேகத்தினால் சூரியகிரணம் நன்றாய்த்தோன்றாதபோது நிழல் தெரியாதகாரணத்தினாலும் அச்சூரிய நிழற்கடிகாரங்கள் பயனிலவென்று ஜனங்கள் கண்டறிந்தார்கள். ஆயினும் வேறே வகையில்லாதபடியால் அம்மட்டில் அவர்கள் திருப்தி யடையவேண்டியதாயிருந்தது. கிறிஸ்துபிறக்க 740 வருஷங்களுக்குமுன்னர் அரசாண்டுவந்த ஜூடா தேசத்து மன்னனுடைய சரித்திரத்தில் மேற்படி சூரிய நிழற் கடிகாரத்தைக்குறித்து முதலில் சொல்லப்பட்டிருக்கிறது. பகற்காலத்தையும் இராக்காலத்தையும் பன்னிரண்டு சமபாகங்களாக ஏற்படுத்தியவர்கள் முதல் முதல் பாபிலோனியா தேசத்தவர்கள். அவர்களிடத் திலிருந்து தான் ஏனையோர் அதைக் கற்றுக் கொண்டார்களாம். மேற்கண்ட காரணங்களினாலே சூரிய நிழற்கடிகாரங்கள் தக்க கால அளவைக்கருவிகள் அல்லவென்று தெரிந்துகொண்டபிறகு ஜனங்கள் நீர்க்கடிகாரங்களை உண்டாக்கிக்கொண்டார்கள். ஒரு சிறு பாத்திரத்தில் தண்ணீர்வார்த்து அதை நன்றாய் மூடி அதன் ஓர்புறத்தில் ஒரு சிறு துவாரத்தை உண்டாக்கி அப்பாத்திரத்தை மேலும், தண்ணீர் இல்லாத அதே மாதிரியான மற்றொரு பாத்திரத்தைக் கீழுமாகவைத்து, அந்தச் சிறுதுவாரத்தின் மூலமாய்த்தண்ணீர் இறங்குவதற்குப் பிடிக்கும் நேரத்தைக்கொண்டே கால அளவைக் கணக்கிட்டுவந்தார்கள். இதைக்கண்ட மற்றும் சிலர் ஓர் பாத்திரம் நிறையத் தண்ணீர்வார்த்து அதில் வேறொரு வெறும் பாத்திரத்துக்குச்சிறு துவாரம்செய்து அதை அத்தண்ணீரில் அமிழ்த்தி அந்த துவாரத்தின் வழியாக அவ்வெறும் பாத்திரத்தில் தண்ணீர் ஏறுவதற்குப்பிடிக்கும் காலத்தைக்கொண்டு மணிநேரங்களைக் கணக்கிட்டுவந்தார்கள். கிறிஸ்துபிறந்த சில வருஷங்களுக்குப்பின்பும் இந்த நீர்க்கடிகாரங்களே உபயோகப்பட்டுவந்தன. அக்காலத்தில் ஜனங்கள்

சூரியோதய காலத்தை ஒருமணியென்று நிர்ணயித்து அங்கிருந்து இரண்டுமூன்று நான் கென்று கணக்கிட்டு வந்தார்கள். உலகமுழுவதும் தனியரசுபுரிந்துவந்த உரோமாபுரி அரசர்களும் அக்காலத்தில் நீர்க்கடிகாரங்களைத்தான் உபயோகித்துவந்தார்கள். கோடைகாலத்தில் உஷ்ணமிகுதியால் தண்ணீர் வெகுசீக்கிரத்தில் ஆவியாய்ப்போகிறகாரணத்தினாலே, நீர்க்கடிகாரங்களைக்கொண்டு கோடைகாலத்திற் கணக்கிடப்படுங்கால அளவைக்கும் மாரிகாலத்திற் கணக்கிடப்படுங்கால அளவைக்குமுண்டாயிருந்த பெருத்தவித்தியாசத்தினால் மேற்படி நீர்க்கடிகாரங்களும் நாளாவர்த்தியில் உதவியற்றனவென்று தெரியவந்தது. அதற்குப்பின்பு ஜனங்கள் தண்ணீருக்குப் பிரதியாகச் சிறுமணலை உபயோகித்துவந்தார்கள். நாளைக்கும் மணற்கடிகாரங்கள் அனேக இடங்களில் உபயோகமாகிவருகின்றன.

பளுவான இருப்புக் குண்டுகளைக் கீழே ஓர்கம்பியின் மூலமாகத் தொங்கவிட்டு அக்குண்டுகள்கீழே இறங்க இறங்க முள்ளுகள் அசைவதென்கிற ஏற்பாடுடைய ஒருவித கடிகாரங்களை ஐரோப்பாகண்டத்தில் கி. பி. 1000 வருஷத்திற்குப் பிற்பாடு ஜனங்கள் வழங்கிவந்தார்கள். இட்டலிதேசத்திலே கி. பி. 1300-ம் வருஷத்தில் முதல் முதல் கடிகாரம் மணியடிக்கத் தலைப்பட்டது. 1600-ம் வருஷத்தில் கலிலியோ என்பவர் நாழிகை வட்டத்தை இயக்கும் தூக்காகிபபெண்டுல ஏற்பாட்டைக்கண்டுபிடித்து அதை அநுசரிக்கத்தலைப்பட்டார். அதுமுதற்கொண்டு இப்போது வழங்கிவருகிறகடிகார ஏற்பாடு தினே தினே அபிவிருத்தியடைந்து வந்தது. வாகனாதிகளில் ஏறிப்போகும் போதும் வேறே சந்தர்ப்பங்களிலும் இலேசாய் நினைத்தமாத்திரத்தில் உபயோகப்படும் கைக்கடிகாரங்கள் இப்போதுவழங்கிவருகின்றன. இவைகளை நியூரெம்பெர்க் என்னும் தேசத்து பீடர் ஹில் என்னும் கனவானொருவர் 1500-ம் ஆண்டில் கண்டுபிடித்தார். இவை முதலில்கண்டுபிடிக்கப்பட்டபோது நியூரெம்பெர்க் தேசத்து முட்டைகளென்று பரிகாசமாய் ஜனங்கள் இவற்றை வழங்கிவந்தார்கள். அது முதல் இதுவரையில் கைக்கடிகாரங்கள் அதிவிசித்திர வேலைப் பாடுகளுடன் வெகு சிறுரூபங்களாகச் செய்யப்பட்டு உலகெங்கும் உலவிவருகின்றன.

ஆதியில் உதவியற்ற சூரியநிழற் கடிகாரங்களை உபயோகித்து வந்த ஜனங்களுக்கும், இப்போது வருஷம், மாதம், வாரம், தேதி, மணி, நிமிஷம், விநாடி முதலிய சகலகால உறுப்புகளையும் இம்மியும் பிச

காது கண்ணிமைப் பொழுதிற் காட்டவல்ல விசித்திர வேலைப் பாடுடைய கடிகாரங்களை உபயோகித்து வரும் நமக்கும் எவ்வளவு வித்தியாச மிருக்கின்றது!

## வணிகனும் அவன்பொருளும்.

முற்காலத்தில் குடிகள்தாம் அருமையாகத் தேடிய பொருளிற் செலவிட்டதுபோக எஞ்சிநின்றதைச் சேமித்துவைப்பதற்குவகை[illegible] றியாதவர்களாய்ப் பூமியில் புதைத்து வைத்துப் பிறகு ஒருவரு[illegible] கும் சொல்லாமல் மரிப்பதும், பிறரை நம்பி அவர்கள் கையில்கொ[illegible] க்க அவர்கள் ஏமாற்றியபோது ஏக்கங்கொண்டு வீணுய்த் துயரு றுவதுமே பெரும்பாலும் இயல்பாயிருந்துவந்தது. இப்போது அவ்வவ்விடங்களில் பூமிக்குள் அகப்படுகிற நிதிகளே பூர்வ காலத்தில் பொருளைச் சேமித்து வைக்க அனேகருக்கு வேறே வகைதெரிய வில்லையென்பதை நிதரிசனமாகக் காட்டுகின்றன. பண மென்முல் பிணமும் வாய்திறக்குமாகையால் எப்படிப் பட்டவனையும் அவனிடத்துப் பிறர்தந்தபொருளை அபகரிக்கப் பொருளாசை தூண்டாமற் போகாது. ஆகவே பிறரிடத்தில் நம்பிப் பொருளைத் தந்து வைப்பது தகுதியன்று. "தன்னுயுதமும் தன்கையிற் பொருளும் பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே." என்றும், "புஸ்தகம் வனிதா வித்தம் பரஹஸ்தம் கதம் கதம், அதவாபுனராயாதி ஜீர்ணம் ப்ரஷ்டாச கண்டசஹ." புஸ்தகத்தையும், ஸ்திரீயையும், பொருளையும் மற்றொருவர்கையில் கொடுத்தால் அவைபோனது போனதுதான், ஒருவேளை அவை தப்பி மீண்டும் நம்கைக்கு வருமாயின் முறைபே கெட்டுப் போயும், பிரஷ்டமடைந்தும், குறைந்தும் போய்விடுமென் றும் சாஸ்திரப் பிரமாணமிருக்கிறது. இக்காலத்தில் கௌரவமான பலகனவான்களால் ஏற்படுத்தி ஆதரிக்கப்பட்டுவரும் நிதிகள்-பாங்கு என்று சொல்லப் பட்ட திரவியக்ஷேமசாலைகளைப்போன்ற ஏற்பாடுகள் பூர்வத்தில் இல்லைபோனும். அப்படிப்பட்ட ஏற்பாடுகளினுல் ஒருவனுடைய பொருள் தினே தினேவட்டி சகிதமாய்விருத்தியடைந்து கொண்டேவருவதுமன்றி அப்பொருள் ஏனையோர்க்கு அவசரகாலங்களில் பலமுகத்தால் உபயோகமாகியும் வருகின்றது. மேலும் தேசக்ஷேமத்துக்கு இன்றியமையாத பெருந்தவர்த்தக விஷயங்களுக்கு அத்தகுதிய ஏற்பாடுகளினுல் மேற்கண்டபடி பலரும் கொடுத்து வைத்த

பொருள் உபயோகமாகிவருகின்றது. நடுவுநிலைமையாயிருந்து பார்க்குமிடத்து இக்காலத்துக்கும் பூர்வகாலத்துக்கும் எவ்வளவு பேதமிருக்கிறது! ஒருவணிகன் முற்காலத்தில் தன்னுடைய திரவியத்தைக் காப்பாற்றிவைக்க வகைதேடி அல்லற்பட்டதை அடியில் வருவதனாலறியலாம் :—

சன்பகாபுர மென்னும் பட்டணத்திலிருந்த மணிபத்திர னென்னும் வணிகனொருவன் ஏதோமுக்கியகாரியத்தின் நிமித்தம் தன்னூரைவிட்டுத் தூரதேசத்துக்குப்போய்ச் சிலநாள் அங்கிருந்து வரவேண்டியதாயிருந்தது. அவன்பதினாயிரம் வராகன் வைத்திருந்தானாகையால் அதைக்காப்பாற்றிவைத்துப்போக நம்பிக்கையானவர்களைத் தேடத் தொடங்கினான். அவனுக்குத்தன்னூரிலுள்ளவர்கள் யாரிடத்தும் நம்பிக்கையில்லை. அடுத்த வூருக்குப் போய் அங்காவது தக்க யோக்கியதை யுள்ளவர்களைக் கண்டு பிடிப்போமென்று கருதி, அவ்வூரையடைந்து கடை வீதியிற்போய், அங்கு பலசரக்கு வியாபாரஞ்செய்யும் ஒருவர்த்தகனுடைய கடைக்குச் சமீபமாய் உலாவிக் கொண்டிருந்தான். அந்த வர்த்தகன் மிகவும் தந்திரசாலியாகையால் உலாவிக்கொண்டிருக்கும் மணிபத்திரனுடைய உள்ளக்கருத்தைக் குறிப்பினால் ஒருவாறுணர்ந்து அவனிடத்திலுள்ள பொருளைத் தகுந்த உபாயத்தால் அபகரிக்கச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அவ்வூரிலுள்ள ஒருகிழவியினுடைய வேலைக்காரி அந்தக்கடைக்கு நெய்வாங்கவர அந்த வர்த்தகனுடைய சம்பளஆள் வழக்கப்படி பணம் வாங்கிக்கொண்டு நெய்கொடுத்து அனுப்பினான். அவ்வேலைக்காரி சிறிது தூரம் போனபிறகு, வர்த்தகன் சம்பள ஆளை நோக்கி அடா! பையா! அந்தக்கிழவிவீட்டு வேலைக்காரி என்னவாங்கினாள் ? நீ எப்படிகொடுத்தாய்? என்று கேட்டனன். சம்பள ஆள், ஐயா! அவள் ஒரு பணம்கொடுத்து நெய்வார்க்கச் சொன்னாள், நான் ஐந்துபலம் வார்த்து அனுப்பினேன் என்று மறுமொழி கூறினன். அதுகேட்ட வர்த்தகன் சிவ! சிவ! என்று செவிகளைமூடிக் கொண்டு அந்த சம்பள ஆளைக் கோபித்து, நீ என்னகாரியஞ் செய்தனை ? இப்படி வர்த்தகஞ்செய்தால் நம்மிடத்து யார்வருவார்கள் ? அப்பால் என்னபேரம் நடக்கும்? நாம் பணத்துக்கு ஆறரைபலம் விழுக்காடு கொண்டோம், அரைப்பலம் லாபம் வைத்துக் கொண்டு ஆறுபலம் பணத்துக்கு விற்றால் போதாதா ? அதிக ஆசைப்படலாமா ? “காணியாசை கோடிகேடு.” என்னும் பழமொழி தெரியாதா ? இனிமேல் நீ இவ்வாறு வர்த்தகஞ் செய்யப்பார்த்தால், அல்லது பிறரால் நான் கேள்விப்பட்டால் உன்னை உத்தியோகத்திலிருந்து தள்ளிப்போடுவேன் என்று மணிபத்திரன் கேட்கும்படி கண்டிப்பவன்போல் நடித்துக்காட்டி, ஓர் ஆளை அனுப்பி அந்தக்கிழவியின் வேலைக்காரியை வரவழைத்து, அந்த ஒருபல நெய்யையும் அவளுக்குவார்க்கச் சொல்லி அனுப்பினான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த மணிபத்திரன் மிகவும் அதிசயமடைந்து, இவனைப்

போலும் யோக்கியதையும் தருமசிந்தையும் பேராசையின்மையும் உடையவர்களை நாம் எங்கும் கண்டதும் கேட்டதும் இல்லை, இவ்வர்த்தகன் பிறர்பொருளை அபகரிக்கக் கனவிலும் கருதான், நாம் எண்ணிவந்த காரியம் இங்கேதான் நிறைவேறவேண்டும், நம்முடைய பொருளை இவனிடத்தில் வைத்துப் போனால் யாதும் கஷ்டமின்றி மறுபடியும் அடையலாமென்று திடசித்தம் கொண்டிருந்தனன். இது இப்படியிருக்க, நெய்வாங்கிக் கொண்டுபோன வேலைக்காரி வீட்டுக்குச் சென்றவுடனே, ஔவையார் நெய்யைப் பார்த்து அது அன்று காலையில் வாங்கிக்கொண்டு வந்ததைக்காட்டிலும் அதிகமாயிருத்தலால் இதென்ன மிகுதியா யிருக்கிறதேயென்று வேலைக்காரியைக் கேட்டாள். அவள் நடந்த விஷயங்களை யெல்லாம் சொன்னாள். அந்த ஔவையார் மிகவும் புத்தி கூர்மையுள்ளவளாகையால் வேலைக்காரியைநோக்கி, அப்போது கடையண்டை யிருந்தவர்கள் யாரென்றுகேட்க, அவள் அம்மா! அயல்தேசத்தானாகிய ஒருவணிகன் அங்கு உலாவிக் கொண்டிருந்தான், அவனைப்பார்த்தால் மிகவும் செல்வனாகத் தோன்றுகிறது என்றுசொல்ல, இது ஏதோ தந்திரமா யிருக்கிறதென்று அக்கிழவி யூகித்தறிந்து, வேலைக்காரியைநோக்கி பிறருடைய சொத்து நமக்கெவ்வளவும் வேண்டாம், உடனே இந்த நெய்யைக் கடைக்காரனிடம் கொண்டுபோய், வழக்கமாய் வார்ப்பதுபோல் ஐந்துபலம் கொடுத்தால் வாங்கிக்கொண்டுவா, இல்லாவிட்டால் நெய்யைக் கொடுத்து விட்டுப் பணம்பெற்றுக் கொண்டு விரைவில் வந்து சேர்க எனக் கண்டிப்பாய்ச் சொல்லியனுப்பினாள். அவ்வாறே அந்த வேலைக்காரி கடைக்காரனிடத்தில் போய்த் தன் எஜமாட்டி கூறியவண்ணம் சொல்ல, கடைக்காரன் சம்மதியாமையால் நெய்யைக்கொடுத்துவிட்டுப் பணம்பெற்றுக் கொண்டு சென்றனள். இதனை அங்கு உலாவியவண்ணம் பார்த்துக்கொண்டிருந்த மணிபத்திரன் மிகவும் அதிசயித்து நாம் இந்தக் கடைக்காரனே பிறர் பொருளுக் காசைப்படாத உத்தமனென்று எண்ணியிருந்தோம், இவனினும் இந்த ஔவையார் பரமயோக்கியதை யுள்ளவளாய்க் காணப்படுகின்றனளே, இவள் பெண்பாலாயிருந்தபோதிலும் அதிக தருமசிந்தையுடையவளாக இருக்கின்றாள், ஆயினும் இன்னும்பார்ப்போமென்று அவ்வேலைக்காரியைப் பின்தொடர்ந்து அக்கிழவியின் வீட்டண்டைபோய் அங்கு உலாவிக்கொண்டிருந்தான். அந்தச்சமயத்தில் ஒருபரதேசி பிக்ஷைக்காக அக்கிழவி வீட்டுக்குவந்தான். அவள் தன் வீட்டண்டை மணிபத்திரன் உலாவிக் கொண்டிருப்பதைப் பார்த்து, முன்னமே கடைக்குப்போய்வந்த தன் வேலைக்காரியால் தனவானென்று தெரிந்துள்ளவளாகையால், அவனிடத்துள்ளபொருளை உபாயத்தால் அபகரிக்க எண்ணி, வேலைக்காரியைநோக்கி, இந்தப் பரதேசிக்கு ஒரு முறத்து நிறைய அரிசியும் அதற்குவேண்டிய சம்பாரங்களும் பதார்த்தவகைகளும் காலணாவும்கொடுத்து அனுப்புவாய், நெடுநேரம் நிற்கவையாதே, பிக்ஷைக்குவந்த பரதேசிகள் தலைவாசலில் நெடும்பொழுது காத்துக்கொண்டிருக்கப் பார்ப்பது பாவத்துக்கிடமாம், அவர்கள் காரியத்தைமுன்னே முடித்துவிட்டுப்

பிறகு நம் வேலையைப்பார்த்தல்வேண்டும், பரதேசிகளுக்கிடாமல் நாம் அன்னம்புசித்தல் ஆகாது, "ஐயமிட்டுண்." என்று என் அம்மையாரும் கட்டளையிட்டிருக்கவில்லையா? கடவுள் நமக்குக்கொடுத்திருக்கும் பொருளெல்லாம் பரதேசிகளுக்கு உபகாரஞ் செய்வதற்கேயன்றி மற்றெதற்குமன்று, அவர்களுக்குச்செய்யும் தருமமொன்றே நமக்கு மறுமைக்குத் துணையாய்வரும்,மற்றவையொன்றும் வாராது,என்று அக்கள்ளக்கிழவி மணிபத்திரன் கேட்கும்படி கூற, வேலைக்காரி எஜமாட்டியின் கட்டளைப்படியே முறத்தில் அரிசியும் அறுநாலும் மற்றவையும் கொண்டுபோய்ப் பரதேசிக்குக் கொடுக்கவந்தாள். அப்பரதேசி வியப்படைந்து, நாள்தோறும் நாம் இந்தக்கிழவிவீட்டுக்குப் பிக்ஷைக்குவருகிறோம், ஒருநாளாவது ஒருபிடி அன்னமும்போடாத இந்த உத்தமி இன்றைக்கு இப்படிகொடுப்பதற்குக் காரணம் ஏதாவது இருக்கவேண்டும், இதை அறியவேண்டுமென்று அவன் கள்ளப்பரதேசியாகையால் நாற்புறமும் சுற்றிப்பார்த்துச் சமீபத்தில் உலாவும் வணிகனைக்கண்டு, இவன் பொருளாளி போல் தோன்றுகிறது, இவனுடையபொருளை அபகரிக்கும்பொருட்டுத் தான் இந்தக்கிழவி இத்தனை ஜாலவித்தை செய்கின்றனளென்றறிந்து, நல்லது, நாமிதற்குத்தக்க உபாயஞ்செய்து அப்பொருளை அபகரிப்போம் என்று தனக்குள் தீர்மானித்து, வேலைக்காரியைநோக்கி, அம்மா! இவைகளெல்லாம் எனக்கேன்? ஒருபிடி அன்னம் எனக்குப்போதுமானது, நான் வீடுகள் தோறும் போய் அங்கங்கு ஒருபிடி அன்னம் வாங்கிப்புசித்துக் கையைத்துடைத்துவிட்டுக் கடவுளைத்தியானித்துக்கொண்டு உறங்கிக் காலம் கழிப்பேன்,இவற்றிற்கு நான்ஆசைவைப்பேனானால் சமுசாரம் மேலிட்டு உலகப்பற்று விபரீதமாய் என்னைமூடிக்கொள்ளும்,அம்மா! இவைகளெல்லாம் எனக்கு வேண்டியதேயில்லை, ஒருபிடி அன்னம் இடு என்று அவ்விடத்திலேயே வாங்கிப்புசித்துக் கையைத் துடைத்துக் கொண்டுபோய்விட்டான். இக்கபட நாடகத்தையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த மணிபத்திரன் பேதையாகையால் பரதேசியின் செய்கையை உண்மையென்றே நினைத்து, அக்கிழவியைவிட இப்பரதேசி உத்தமன், இவன் உலகப்பற்றொழிந்தவன், பணத்திலாசையற்றவன், இப்பரதேசியினிடத்தில்தான் நம்முடையபொருளை அடைக்கலப் படுத்திவைக்கவேண்டுமென்று கடைசியாய்த் தீர்மானித்து, அவன் பின்னேசென்றான். பரதேசி தானிருக்கும் மடத்துக்குப்போனவுடனே, மணிபத்திரன் அவ்விடம்போய், அந்தப் பரதேசியினுடைய பாதங்களில் சாஷ்டாங்கமாகவீழ்ந்து பணிந்து எழுந்து கைகட்டிக்கொண்டு நின்று, சுவாமீ! அடியேன் விண்ணப்பத்தைச் செவியேற்றருளல்வேண்டும், நான் தூரதேசத்துக்குப்போய்ச் சில காலம் அங்கிருந்துவர வேண்டியிருப்பதால் என்னிடத்திலுள்ள பதினாயிரம் வராகனையும் யாரிடத்தில் வைத்துப்போனால் மறுபடியும் சேதமில்லாமல் எனக்கு அப்பொருள் சரியாய்ச்சேருமென்று நெடுநாளாகத் தேடிக்கொண்டிருந்தேன், தேவரீர் பரசொத்துக்கு ஆசைப்படாதபரமோத்தமரென்றும் பிரபஞ்சவைராக்கியம் பெற்றவரென்றும் நான் கண்டபடியால்,என்பொருளை உம்மிடத்தில்

வைத்துப்போகலாமென்று மனோதிடங் கொண்டிருக்கின்றேன், தேவரீர்திருவுளத்தில் கருணைகூர்ந்து, என் வேண்டுகோளை அங்கீகரிக்கவேண்டுமென்று மிகவும் பணிவோடு மொழிந்தனன். அதுகேட்டு அந்தத் திருட்டுப்பரதேசி இரண்டுகாதுகளையும் கைகளால் பொத்திக்கொண்டு, சிவ! சிவ! ஆட்கொல்லியாகியபணத்தின் விஷயத்தைப்பற்றி என்னிடத்தில் பேசவே வேண்டாம், நான் அதைக் கையாலும் தொடமாட்டேன், தொட்டால் பிரபஞ்சப்பற்று அதிகரிக்கும், நான் மண், பெண், பொன் என்னும் மூன்றாசைகளையும்பற்றறவொழித்துத் தலைமுழ்கிவிட்டு அல்லல் அற்றிருக்கின்றேன், இந்தப்பீடை மறுபடியும் எனக்கு யாதுக்கு? இதனால் ஆகவேண்டிய பிரயோசனம் எனக்கு ஒன்றுமேயில்லை, இப்போது எனக்கு இப்பொருள் துரும்பைப்போலிருக்கிறது, நான் ஓடும், பொன்னும் சமதிருஷ்டியாய்ப்பார்க்கிறேன், இத்தகையமேலான பரிபாகதிசையில் இருக்கிற யான் நீ கொண்டுவந்த பொருளைப் பார்க்கவும் ஸ்பரிசிக்கவுமாட்டேனென்று மறுத்துவிட்டனன். அது கேட்ட களங்கமற்ற மனதுடைய மணிபத்திரன் மனவருத்தமடைந்து, கண்ணீர்விட்டழுது, அந்தப் பரதேசியினுடைய பாதங்களை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு சுவாமீ! இப்பொருள் நான்மிகவும் பாடுபட்டுச் சம்பாதித்தது, உம்மிடத்திலன்றி வேறெங்கும் வைத்துப்போக எனக்குச்சம்மதமில்லை, தேவரீர் என் குறைக்கு இரங்காவிட்டால் நான் உம்மைவிட்டுப்போகேன் என்று உறுதியாய்க்கூறித் தீர்க்கதெண்டம் சமர்ப்பித்தான். அதுகேட்ட பரதேசி நம்முடைய யோகமே யோகம், இப்படியும் பொருள் இடந்தேடி வலியவருவதுண்டா? என்று தன்னையறியாப் பெருங்களிப்படைந்து மணிபத்திரனை நோக்கி, நீ படுந்துயரத்தைப்பார்த்தால் எனக்கு மனஞ்சகிக்கவில்லை, உடல் எடுத்ததற்கு எவ்விதத்திலும் உயிர்களுக்கு உபகாரமே செய்யவேண்டுமாகையால் உன்விண்ணப்பத்தை முற்றிலும் மறுக்கக்கூடவில்லை, இந்தமடத்தில் உனக்குச்சம்மதமான ஒரு இடத்திலே புதைத்துவிட்டுப்போய் மறுபடியும் உனக்கிஷ்டமானபோது வந்தெடுத்துக்கொள் என்றுசொன்னான். மணிபத்திரன் சந்தோஷங்கொண்டு, அம்மடத்தினோர் புறத்தில் தன்பொருளைப் புதைத்துவிட்டு மறுபடியும் பரதேசியினிடத்தில் விடைபெற்றுப்போய்த் தன் கருமங்களை முடித்துக்கொண்டு சிலகாலங்கழிந்தபின்பு மீண்டும் பரதேசியினிடம் வந்து தான் புதைத்துவைத்துப்போன இடத்தில் தோண்டிப்பார்த்தான். இதற்குமுன்னமே பரதேசி அந்தப்பொருளை அப்புறப்படுத்தி விட்டபடியால், அங்கு பொருளைக்காணாமல் மணிபத்திரன் பரதேசியைநோக்கி சுவாமீ! நான் புதைத்த இடத்தில் பொருளைக் கண்டிலேன், என்னசெய்வேன் என்றுகேட்க, அப்பா! நான் அதைக் கையாலும் தொடமாட்டேனென்று அப்போதே சொல்லவில்லையா? நீ புதைத்ததைக்கூட நான் பார்க்கவில்லையே, நன்றாய்ப்பார் என்றுசொன்னான். அதை மணிபத்திரன் மெய்யேயென்று நம்பிப் பல இடங்களில் தோண்டிப்பார்த்தும் காணாமல், பரதேசியை மறுபடியுங் கேட்கப்பயந்து சிந்தாகுலத்தனாய் ஔவையார் வீட்டண்டைபோய் முகவா

ட்டத்துடன் உலாவிக்கொண்டிருந்தான். அங்ஙனமூதா
உள்ளேவரவழைத்து, நீ சில நாளைக்குமுன் இங்குவந்தபோ
து முகம் வேறுபட்டிருப்பதற்குக்காரணம் யாதென்றுகேட்
பரதேசியினிடத்தில் தான் மோசம்போன வரலாறு முழு
தான். நான் அப்பொருள் முழுவதும் உனக்கு வருவித்துத் தந்தா
துகொடுக்கின்றனையென்று அக்கிழவிகேட்க, ஆயிரம்பொன் த
மணிபத்திரன் ஆணையிட்டுக்கூறினன். அதற்கு அவள் அப்படிய
று சாயுங்காலம்பரதேசியிருக்கும் மடத்துக்குப் போகிறேன், நீ சு
ணிக்கு அங்குவருவையேயாகில் உன் பொருளை உனக்குத் தருவிக்
றனள். மணிபத்திரன் மலடி பிள்ளைபெற்றது போலும் பரம சந்தே
ண்டு அவ்வாறே செய்கிறேனென்று சொல்லிப் போயினன். பிறகு
தன்னிடத்திலுள்ள இரத்தினாபரணங்களை எல்லாம் ஒருதாம்பாளத்தில்
து வஸ்திரத்தால் மூடிக்கொண்டு வேலைக்காரியை நோக்கி, நான் பரதேசி மட
த்துக்குச் செல்கின்றேன், நீ சிறிது நேரம் சென்றபின் அங்குவந்து, அம்மா! ஊ
ருக்குப்போன உன்னுடைய குமாரர் வந்துசேர்ந்தனர், உன்னை உடனே அழைத்
துவரச்சொன்னார் என்று விரைந்தோடிவந்து என்னிடத்திற் சொல்லென்று
கட்டளையிட்டுத் தாம்பாளத்தை யெடுத்துக்கொண்டு பரதேசியினிடம் போய்
அவனை வணங்கி சுவாமீ! என்னுடைய அருமைப்புதல்வன் காசிப் பட்டணத்
துக்குப்போய் இரண்டு வருடகாலமாயிற்று, இதுவரையிலும் கடிதமெழுதிக்
கொண்டுவந்தான், இப்போது மூன்றுமாதமாகக் கடிதம் வரக்காணேன், நான்
போய்ப்பார்த்து அவனை இங்கு அழைத்துவரவேண்டும், இந்த ஆபரணங்களைத்
தக்கவர்களிடத்தில் அடைக்கலமாகவைத்துப்போக எண்ணங் கொண்டிருக்கி
றேன், உம்மைப்பார்க்கிலும் நம்பிக்கையுள்ளவர்கள் வேறுயாரும் இவ்வூரி
லில்லை, தேவரீரே இந்த இரத்தினாபரணங்களைக் காப்பாற்றித் தரவேண்டும்
என்று சொல்லித் தாம்பாளத்தின்மேல் மூடியிருந்த வஸ்திரத்தை யெடுத்
துக்காட்டினள், அதைக் கண்டமாத்திரத்தில் பரதேசிக்கு நெஞ்சம் பூரித்து
நமக்கேதோ நல்லகாலமிருக்கிறது, சுக்கிர திசையிருந்தால் இப்படியிருக்
கவேண்டுமென்று மனங் குதுகலித்து, அம்மா! நல்லது, அப்படியே ஆகட்
டும், உனக்கிஷ்டமான இடத்தில் புதைத்து வைத்து வேண்டியபோது வந்
தெடுத்துக்கொண்டு போகலாம் என்று சொல்லிக் கொண்டிருக்கையில் மணி
பத்திரன் வந்து சுவாமீ ! என்று வணங்கி நின்றனன். அவனை அக்கள்ளப்
பரதேசி நோக்கி ஒன்றுமறியாதவன்போல் நீயாரென்றுகேட்க, நான் மணி
பத்திரனென்னும் வணிகன், தங்களிடத்தில் வைத்துப் போன பதினாயிரம்
பொன்னையும் வாங்கிக்கொண்டுபோக வந்தேனென்றான். பரதேசி திடுக்
கிட்டு, இதென்ன வம்பாய் முடிந்தது? நாம் இவன்தந்த அற்பத் தொகை
யான பதினாயிரம் பொன்னுக் காசைவைத்தால் கைக்கெட்டிய இலக்ஷக்
கணக்காய் விலையேறப்பெற்ற இரத்தினாபரணங்களை இழந்து விடுவோமென்
றெண்ணி, அவனைப்பார்த்து, அப்பா ! உன்பொருள் அதோ புதைக்கப் பட்டி

டி யெடுத்துக்கொண்டுபோ என்று சொல்ல மணிபத்திரன் தடன் போய்த் தன்பொருளைத் தோண்டியெடுத்துக்கொ கையில், வேலைக்காரி ஓடிவந்து அம்மா! உன் செல்வப் ிருந்து பரிசனங்கள்-வாகனாதிகளோடும் வந்திருக்கிறார், உன் திக ஆவல்கொண்டு என்னை அனுப்பி தக்ஷணமே அழைத்து என்று சொன்னாள். ஔவையார் அதுகேட்டுப் பரதேசியை ! என் குழந்தை வந்துவிட்டது. நான் போகிறேன் என்று ணங்கள் வைத்துள்ள தாம்பாளத்தை வஸ்திரத்தால்மூடி எடுத்து ி கையில் கொடுத்து ஆனந்தபரவசமடைந்தவள் போல்நின்று கூத் பக்கத்திலிருந்த மணிபத்திரனும் கூட ஆடினான். அதைக்கண்ட ம் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற் போய்விட்டதே என்னும் பெ க்கம் உள்ளேயிருந்தாலும் அதைவெளியே காட்டாமல் தானுமவர்களோ டு ஒக்க ஆடினான். அதைக்கண்டவேலைக்காரி பரதேசியைப்பார்த்து சு வாமி! என் எஜமாட்டி தூரதேசம்போய் நெடுநாள் சென்றுவந்ததன் செல்வக்குமாரன் நல் வருகையைக் கேட்டு ஆனந்தமேலீட்டால் ஆடு கிறாள், இவ்வணிகர் இழந்த பதினாயிரம் பொன் மறுபடியும் கைக்குவந்தது பற்றிக் களித்து ஆடுகிறார். தேவரீர் என் வீணேகால்நோவ ஆடுகிறீரெ ன்று கேட்டனள். அதற்குப்பரதேசி - "விழுந்தவன் சிரிப்பது வெட்கத் துக்காற்றாமல்." என்னும் பழமொழி நீகேட்டதில்லையா? என்றுசொன்னான். பிறகு மணிபத்திரன் தான்கூறிய வண்ணம் அந்தந்திரசாலியாகிய கிழவிக்கு ஆயிரம்பொன் கொடுத்துவிட்டுத் தன் ஊருக்குப்போய்ச் சேர்ந்தனன்.

ஆராய்ச்சிசெய்து பாராமல் கேட்டதெல்லாம்மெய், கண்டதெல் லாம் உண்மையென்று எண்ணி நம்பிக்கைவைத்து மணிபத்திரன் மிகவும் சங்கடப்பட்டது இக்கதையால் நன்கு விளங்குகிறபடியால் எந்த விஷயத்திலும் ஆராய்ச்சியும் நம்பிக்கையும் இணைபிரியாத் துணை வர்களாயிருத்தல்வேண்டும். ஒருவன் வருந்தித்தேடிய பொருளைக் காப்பாற்றிவைப்பதற்கு இப்போதிருப்பதுபோல் திரவிய க்ஷேம சாலைகள் - நிதிகள் முதலியவை அக்காலத்திருக்குமாயின் மணிபத் திரன் மேற்கண்டபடி அல்லற்பட்டிரானே?

## சூரியபிம்பலட்சணம்.

இப்பூமியினுள்ள யானை முதலெறும்பீறான சகல உயிர்வர்க்கங் களும் புல் பூண்டுமுதலிய தாவரவர்க்கங்களும் மற்றுமுள்ள சேதனா சேதனங்களும் இவைகள் யாவற்றிற்குமேலான மானிடர்களும் சுகி த்துவாழ்வதற்குச் சூரியன் அத்தியாவசியமானது. வானசாஸ்திரி

கள் நெடுங்கால ஆராய்ச்சியினாற் கண்டறிந்த சில அற்புதமானவிஷயங்களை இங்கெடுத்துக்காட்டுகிறோம்:—

சூரியபிம்பம் குறுக்களவில் 763,000 மயிலிருக்கிறது. நாம் வசிக்கும் இப்பூமியின் குறுக்களவோ 7,950 மயிலுக்கதிகமாயில்லை. ஆகவே இப்பூமியைப்பார்க்கிலும் சூரியபிம்பம் 1,392,500 மடங்கு பெரிதாயிருக்கிறது. சூரியனையும் இப்பூமியையும் ஒத்திட்டுப்பார்க்கையில் சூரியனை ஒரு கிச்சிலிப்பழமாகவும் பூமியை அதன் மீதுள்ள ஓர் சிறுமணலாகவும் சொல்லலாம். வாஸ்தவத்தில் இவ்வளவு பெரிதாயிருக்கும் சூரியன் இப்பூமிக்குச் சற்றேறக்குறைய ஒன்பதுகோடியே இருபதுலட்சம் மயில் தூரத்திலிருக்கிறபடியால் நமக்கு அது ஓர் சிறு உருண்டைபோல் தோன்றுகின்றது. இவைபோன்ற பெருத்தகிரகங்களின் பருமன் முதலியவற்றைக்கணக்கிட்டு நிச்சயமாயறிதல்கூடும். இவை யாவற்றையும் தன்னுளடக்கிக்கொண்டிருக்கும் ஆகாயவெளிப்பரப்பை அளவிட்டுக்கூற ஒண்ணாது. அது காலத்தைப்போல் ஆதியந்தமற்றது. இப்பூமியிலிருந்து சூரியமண்டலம் வரையில் ககனமார்க்கமாய் இருப்புப்பாதை ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலமாகப் புகைவண்டியிலேறி விடாது யாத்திரைசெய்வோமாகில் சூரியமண்டலத்தைப்போய்ச் சேருவதற்குச் சற்றேறக்குறைய நானூறு வருஷம்பிடிக்கும். ஒரு நிமிஷத்தில் சுமார் எட்டுமெயில் வீதம் போகத்தக்க வேகத்துடன் ஒரு பீரங்கிக்குண்டை இங்கிருந்து சூரியமண்டலத்துக்குச் செலவிடுப்போமாகில் அது சூரியனைப்போய்த் தாக்குவதற்குச்சுமார் இருபத்திரண்டுவருஷம் பிடிக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஓர் சூரியகிரணம் பூமியிலுள்ள நம்மைத் தாக்குவதற்குச் சற்றேறக்குறைய எட்டுநிமிஷம்பிடிக்கிறது. ஆகவே சூரியன் உதயமாவதாக நமக்குத் தோன்றுகிறகாலத்துக்கு எட்டு நிமிஷத்துக்கு முன்னரே அது வாஸ்தவத்தில் உதயமாயிற்றென்று நாம் அறிந்துகொள்ளவேண்டியது.

நம்முடைய ஊனக்கண்ணினால் பார்க்கமுடியாத அவ்வளவு பிரகாசமாய்ச் சூரியனிருக்கிறபடியினாலே அதன் பிம்பலட்சணத்தை நாம் கண்டறியவேண்டுமாயின், மங்கலான பச்சைக்கண்ணாடியமைந்த தூரதிருஷ்டிக் கருவியைச் சகாயமாய் வைத்துக்கொள்ளவேண்டியது. அதைக்கொண்டு சூரியபிம்பத்தைக் காணுகையில் அதில் சில விசித்திரங்கள் தோன்றுகின்றன. சூரியபிம்பத்தைச்சுற்றிலும் ஒரு பெரும்

சமுத்திரத்தைப்போல அக்கினி சூழ்ந்திருக்கின்றது, அன்றியும் அளவிறந்த உலோகங்கள் கொடிய உஷ்ணத்தினால் உருகி ஆவியாய் எழும்ப அந்த ஆவி சூரியபிம்பத்தை நாற்புறமும் சுற்றிக்கொண்டிருக்கிறது. தூரதிருஷ்டிக் கண்ணாடியைக்கொண்டு வானசாஸ்திரிகள் சூரியபிம்பத்தை ஆதியில் பார்த்தகாலத்திலே அதனிடத்துக்கறுத்த புள்ளிகளிருப்பதைக்கண்டு வியந்தார்கள். அக்கறுப்புக்குறிகளைச் சில நாள்வரையில்விடாது தினம் பார்த்துக்கொண்டே வந்தபோது அவை கீழ்த்திசையினின்றும் மேற்றிசையாகச் சுழன்றுகொண்டுவந்து சில நாள்வரையில் அவர்கள் கண்ணுக்குப் புலப்படாமலேயிருந்து மறுபடியும் கீழ்த்திசையில்தோன்றின. இதனால், பூமியைப்போலவே சூரியனும் சுழன்றுகொண்டேவருகிறதென்றும், அது அந்தப்படி ஒருவிசைசுழலுவதற்கு நம்முடைய கணக்குப்படி இருபத்தைந்து நாளாகிறதென்றும் வானசாஸ்திர பண்டிதர்கள் கணக்கிட்டார்கள். இதை யோசித்துப் பார்க்குமிடத்து, சூரியன் நின்ற நிலையிலிருந்து தன்னிடத்து யாவற்றையும் இழுத்துக்கொள்ளும் சக்தியினால் பூமிமுதல் ஏனையகிரகங்கள் தன்னைச்சுற்றிவரச் செய்துகொள்ளுகிறதுபோலவே, அச்சூரியனைப்போன்ற அனேக சூரியர்கள் தன்னைச்சுற்றிவரச் செய்துகொள்ளுகிற பெருத்தமத்திய சூரியபிம்பம் ஒன்று ஆதியந்தமில்லா வெளிப்பரப்பில் இருக்கவேண்டியதென்று எண்ணுவதற்கிடமிருக்கிறதல்லவா? அம்மத்திய சூரியன் எதுவோ? அது எவ்விடத்திலிருக்கின்றதோ? சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினனாகிய மானிடனுடைய மனதுக்கு அது எவ்வளவும் எட்டவில்லையே!

சூரிய பிம்பத்தின் மேற்புறம் மேற்கண்டபடி அக்கினி மயமான ஓர் பெருத்த சமுத்திரத்தில் முழுகி இருக்கிறபடியினாலே, நீர்மயமான சாதாரண சமுத்திரத்தில் பிரசண்டமாருதத்தால் ஜலம் நெடுந்தூரம் வரையில் நாற்புறமும் கொந்தளித்து எழுகின்றதுபோல் அவ்வக்கினிக்கடலும் ஒவ்வோர்காலத்தில் ஆரவாரித்தெழுகின்றது. அந்தச் சமயங்களில் சூரியபிம்பத்திலிருந்து எழுகின்ற அக்கினிக் கொழுந்து சில நிமிஷங்களுக்குள்ளே இரண்டு லக்ஷம் மயில் தூரம் வரையில் மேலெழுந்துபாய்கின்றது. சில சமயங்களில் மேற்கண்ட அக்கினி மயமான சமுத்திரம் இடை யிடையே விலகிவிலகித் தோன்றுதலினால் உட்புறத்துள்ள சூரிய பிம்பத்தின் எதார்த்தமான கருநிறம் நமக்குப் புலப்படுகின்றது. பகற்காலத்தில் மேகங்கள் ஆகாசத்திலே

இடம்விட்டுச் சற்றே பெயர்கையில் அந்த இடைவெளி மூலமாக அதற்கு மேலிருக்கும் ஆகாசத்தின் நீலவர்ணம் நமக்குத் தோன்றுவது போல் மேற்கண்ட அக்கினிக்கடலின் இடைவெளி மூலமாகச் சூரிய பிம்பத்தின் இயற்கைக் கருநிறம் வெளியே தோன்றுகின்றது. இந்த இடைவெளிகள்தான் மேலே சொல்லப்பட்ட கறுத்த புள்ளிகளாகத் தோன்றுகின்றன வென்று சில வானசாஸ்திரிகள் அபிப்பிராயப் படுகிறார்கள். இவைகளில் சில வெகுசீக்கிரத்தில் மாறுகின்றன. மற்றும் சில இரண்டு மூன்று வாரங்கள்மட்டும் அப்படியே இருக்கின்றன. பூமியைச்சுற்றிலும் வாய்வு இருப்பதுபோல் சூரிய பிம்பத்தைச்சுற்றிலும் நெடுந்தூரம்வரையில் அக்கினிசொரூபமான ஒளிவீசும் ஓர்வித புகை சூழ்ந்திருக்கின்றது. பகற்காலத்தில் நாம் நட்சத்திரங்களை எப்படி காணக்கூடாதோ அதுபோல், சூரியனைச் சூழ்ந்திருக்கும் மேற்படி அக்கினிமயமான புகையை நாம்சாதாரணமாய்ப் பார்க்கமுடியாது. ஆயினும் கிரகணகாலங்களில் சந்திரபிம்பத்தினால் சூரியஒளி தடைபடும் போது அவ்வக்கினி மயமான புகைகள் சூரிய பிம்பத்துக்கு இட்ட ஜோதிமயமான மணிமகுடம்போல் காணப்படுகின்றன. பெரும்புயலடிக்கும் காலத்துச் சமுத்திரத்தின் அலைகள் கொந்தளித்து மேலெழுந்து கீழேவிழுவதுபோல் ஓர்வித அக்கினிப் பிரவாகம் சூரிய பிம்பத்தைச் சதா சூழ்ந்துகொண்டு இருக்கிறபடியினால் அதிலிருந்தும் கொழுந்துவிட்டு அக்கினி நாற்புறமும் மேலெழும்புவதும் அடங்குவதுமாயிருக்கிறது. சூரியனைச் சுற்றிலும் இந்தப்படியிருக்கும் அக்கினிக்குக் காரணம் இஃதென்பதை வானசாஸ்திர பண்டிதர்கள் சரியாய்க் கூறவில்லை. அவர்களுக்குள் வெகுசாய் இது விஷயத்தைக் குறித்து அபிப்பிராய பேத முண்டாயிருக்கிறது. ஆயினும், பாரமான சில பெருத்த பொருள்கள் சதா சூரியபிம்பத்திலே நாற்புறமும் அதிவேகத்துடன் வந்து விழுந்துகொண்டே யிருக்கிறபடியினாலே மேலே விவரித்தபடி அபாரமான அக்கினி சூரியபிம்பத்தைச் சூழ்ந்து உண்டாகின்றதென்று சில வானசாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். இவர்கள் இங்ஙனம் கூறுவது சரியாகத்தோன்றுகிறது. ஏனெனில் இவ்வளவு பெருத்த உஷ்ணத்தைச் சூரியன் இயற்கையில் உடைத்தாயிருக்கினும் நாற்புறமும் வெளிப்பரப்பிலே உஷ்ணம் ஆவியாய்ப் பரவிப்போய்க் கொண்டிருக்கிறபடியால் நாளாவர்த்தியில் உஷ்ணம் குறைந்து ஒருகாலத்தில் சூரியன் தணிந்து போக வேண்டிவரும்.

குறைவு பட்டுக்கொண்டுவரும் உஷ்ணத்தைப் பூர்த்தி செய்துகொண்டே வருவதற்கு எவ்விதத்திலேனும் அதற்கு உஷ்ணவருவாயிருத்தல்வேண்டும். ஆகையால் பாரமான சில பொருள்கள் சூரியனது கிராஹியசக்தியினுலிழுக்கப்பட்டு சதா சூரிய பிம்பத்தில் வந்து தாக்கிக்கொண்டிருப்பதினுலே உஷ்ணக்கொதிப்பு குறைவுபடாமல் மேலும் மேலும் உண்டாய்க் கொண்டேவருகிற தென்னும் சித்தாந்தம் சரியென்றே தோன்றுகின்றது. ஆகாயத்திலுள்ள அளவிறந்த நட்சத்திரங்களென்னும் அண்டங்களுக்குள்ளே சூரியன் இப்பூமிக்கு மிகவும் சமீபமானதாகையால் அது நமக்கு அவ்வளவு பெரிதாகவும் பிரகாசமுள்ளதாகவும் தோன்றுகின்றது. சூரியன் தன்னிடத்து ஜெகதீசன் அமைத்துவைத்த பேராற்றலால்தான் இப்பூமண்டலமும் ஏனைய கிரகங்களும் தன்னைச் சூழ்ந்து வரும்படியாகச் செய்து அவற்றில் வசிக்கும் சகல உயிர்வர்க்கங்களுக்கும் ஜீவாதாரமா யிருந்துகொண்டும், அவ்வண்டங்களெல்லாம் தத்தம் நிலையிற்பிரியாமல் நிறுத்திச் செலுத்திக்கொண்டும் வருகின்றது. இப்பூமண்டலத்திலுள்ள சகல உஷ்ணத்துக்கும் விளக்குமுதலிய வெளிச்சங்களுக்கும் சூரியனே ஆதிகாரணமாயிருக்கின்றது. உஷ்ணமிராவிடில் ஜலம் ஆவியா யெழும்பி மேகமாவது காலத்திரயத்தும் இல்லை. மேகமில்லாவிடத்து மழை எங்ஙனம் உண்டாகும்? மழை யில்லாவிடத்து உலகத்துக்கு நேரிடும் அனர்த்தத்தை அளவிட்டுக் கூறவொண்ணுது:—

> "நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்."
> "தானந் தவமிரண்டுந் தங்கா."
> "விரிநீர் வியனுலகத் துண்ணின்றுடற்றும்பசி."

இதுகாறும் கூறப்பட்ட விஷயங்கள் யாவற்றையும் ஐரோப்பிய வானசாஸ்திரிகள் நெடுநாளைய ஆராய்ச்சியினுலும் நுட்பபுத்தியினுலும் அயர்விலா ஊக்கத்துடன் கண்டுதெளிந்து உலகத்துக்கு உபகாரார்த்தமாகத் தெரிவித்திருக்கிறுர்கள். சூரியன் உலகத்திலுள்ள சேதனுசேதனங்களுக்கு இன்றியமையாத் துணையாயும் மகத்தாகிய ஜீவாதாரமாயுமிருக்கிற காரணத்தை இந்துக்கள் உணர்ந்தே சூரியனைக் கடவுளுக்கு இருப்பிடமாகக் கொண்டு அதை வழிபட்டுவருகிறுர்கள். சைவர்கள் அதனிடத்துச் சதாசிவப்பிரமம் இருப்பதாகவும், வைணவர்கள் நாராயணமூர்த்தி இருப்பதாகவும் கூறுகிற்பர். அதன் பிம்பலக்ஷணத்தையும், அதற்கும் இந்தப்பூமிக்குமுள்ள தூரமுதலிய விவ

ரங்களையும், மற்றும் விசித்திரங்களையும் ஐரோப்பியர்களைப் போல் புராதன இந்துக்கள் ஏன் அறிந்திலர்? என்று வினவி, அவர்கள் கேவலம் அவிவேகிகளானபடியால் இத்தகைய அற்புதமான விசித்திரங்கள் ஐரோப்பியர்களுக்கு விளங்கியதுபோல புராதன இந்துக்களுக்கு விளங்கவில்லையென்று இப்போது சிலர் ஏளனஞ் செய்கிறார்கள். புராதன இந்துக்களில் கல்வி-நுட்பபுத்தி முதலிய விசேஷங்கள் சால அமையப் பெற்ற சாதுக்கள் ஞானிகளாய் உலகப்பற் றொழிந்தவர்களாகிக் கடவுளின் திருவடி யொன்றையன்றி ஏனையவற்றைப் பொருளெனமதியாதிருந்த படியினும், இவ்வகிலாண்டத்தையும் அதற்குளொடுங்கிய ஆதித்தன்முதலிய அண்டங்கள் யாவையும் நிலையில்லா மாயாகாரியங்களென்னும் சித்தாந்தத்தைக் கொண்டிருந்தபடியினுமே அவர்கள் மஹா புத்திமான்களாயிருந்தும் இவை போன்ற விஷயங்களில் மனதைச் செலுத்தாமற் போய்விட்டார்கள்.

> "எங்கையுனக்கல்லாதெப்பணியுஞ்செய்யற்க
> கங்குல்பகலெங்கண்மற்றொன்றுங்காணற்க
> இங்கிப்பரிசேயெமக் கெங்கோனல்குதியேல்
> எங்கெழிலென் ஞாயிறெமக்கேலோ ரெம்பாவாய்."

என்று இந்துக்களுக்குள் விவேகத்தில் சமானாதிகமில்லாத மஹானொருவர் கூறுகின்றார். அவர்கள் கொண்ட சித்தாந்தத்துக்கு ஏற்க அவர்கள் அந்தப்படிதானேயிருக்கவேண்டியது? ஆகையால் அவர்களை எவ்வளவும் அவிவேகிகளென்று நிந்திப்பது தருமமன்று. உலகத்தையும் அதைச் சார்ந்த பொருள்களையும் நித்தியமானவைகளென்னும் சித்தாந்தத்தை அவர்கள் கொண்டிருந்தால் மேலே காட்டப்பட்டன வற்றை ஒத்த அளவிறந்த விசித்திரங்களை அவர்களும் கண்டுபிடித்தேயிருப்பார்கள். ஏன் அங்ஙனம் கூடாது? விவேகமும் ஆராய்ச்சியுந் தானே இப்படிப்பட்டனவற்றை யறிவதற்குக் காரணம்?

## தருமம் என்பது யாது?

ஒவ்வொருவனும் தன் இன்னுயிரைப்போல் ஏனைய உயிர்களைக் கருதி அவற்றிற்கு நேரிடும் இடுக்கண்களைத் தனக்கே நேரிடும் இடுக்கண்களாகப் பாவித்துத் தன்னாலியன்ற வரையில் மனமொழி மெய்களினால் உதவிபுரிந்து வரவேண்டியது. அங்ஙனம் செய்தல் மானிட இலக்கணம் பெற்ற ஒவ்வொருவனுடைய கடமையாகும்.

அதுதான் தருமம் எனப்படும். எவ்வகைப்பட்ட பெருஞ்சம்பத்தை ஒருவன் எய்தப் பெற்றானே யாயினும் அவன் பிறருடைய உதவி யில்லாவிடத்து உலகத்தில் சுகித்து வாழ்வது அரிது. யாவரும் பரஸ்பர உதவி புரிந்து கொண்டு வந்தால்தான் ஜனசமூகவாழ்க்கை நடைபெறும். இது நம்மவ்வொருவருக்கும் அனுபவசித்தம். இதைத் தீர்க்கமாய் ஆலோசித்துப் பார்க்குமிடத்து, ஒவ்வொருவனும் தன்னு லியன்ற வரையில் பிறருக்கு உதவிபுரிதல் வேண்டுமென்பதே கடவு ளின் கருத்தென்று தெளிவாய் விளங்குகிறது. ஆகவே தருமசிந்தை யென்பது எப்படிப்பட்டவனிடத்தும் சிறிதேனும் இராமற்போகாது. ஜீவகாருண்யம் - தெய்வபக்தி முதலிய அருங்குணங்கள் விருத்தி ஆக ஆகத் தருமசிந்தையும் மனதில் அதிகரிக்கும். இயற்கையில் மனி தன் முற்றும் சுயப்பிரயோசனத்தையே கருதுபவனென்றும், பரோப கார சிந்தை அவனிடத்துச் செயற்கையா லுண்டாகிறதென்றும், அங் தப்படி செயற்கையாலுண்டாகும் பரோபகார சிந்தையும் ஒருவித சுய ப்பிரயோசனத்தையே தனக்குக் காரணமாகக் கொண்டிருக்கிறதென் றும் மாண்டேவில் என்பவர் முதலாய சில மனோதத்துவலட்சண சாஸ் திரிகள் கூறுகின்றனர். ஒருவன் ஒரு ஏரிகரைவழியாய்ப் போய்க் கொண்டிருக்கையில் அக்கரைக்குச் சமீபமாகத் தண்ணீரில் விழுந்து தத்தளித்துக்கொண்டிருக்கும் ஒரு சிறுகுழந்தையை அவன்கண்டகா லத்து அதிவிரைவாய் ஓடித் தன்னாலாகிய உதவிபுரிந்து அக்குழந்தை யைவெளியே யெடுத்து விடுகின்றான்; அவன் அங்ஙனம் புரிந்த அற் புதமான செய்கைக்காக அவனைக் கைகொட்டி வியப்பார் அருகில் ஒரு வருமில்லை; அவனுக்கு வேறுவகையினால் எவ்வித பரிசிலையும் யாவ ரும் கொடுப்பாரில்லை; அங்ஙன மிருந்தும் அவனை அந்தக்காரியத்தைச் செய்யத் தூண்டியதெது? இயற்கையில் அவனிடத்துப் பரோபகார சிந்தையென்னும் தருமகுணம் இராவிடில் அவன் ஏன் அந்தக்காரியத் தைச் செய்யவேண்டும்? அந்தக்காரியத்தை அவன் செய்ததில் எவ்வித சுயப்பிரயோசனத்தையும் அவன் எதிர்பார்த்திலனே? என்று நாம் கேட்போமானால், அப்படியல்ல, தன்னாலியன்ற ஓர் உபகாரத்தை அக்குழந்தைக்குச்செய்து அதனைத்தப்புவித்ததனால் அவனுடைய மனதில் ஒருவித திருப்தியும் மகிழ்ச்சியும் உண்டாகின்றன, அங்ஙனம் செய்யாவிடில் ஒருவித அதிருப்தியும் துக்கமும் அவனுடைய மனதில் உண்டாகின்றன, அத்தகுதிய மகிழ்ச்சியைப் பெறும் பொருட்டும், துக்கத்தைப் போக்கிக்கொள்ளும் பொருட்டும் அவன் அக்காரியத்

தைச்செய்கிருனுகையால் அவன் சுயப்பிரயோசனத்தையே நாடி அந்தக்காரியத்தைச் செய்கிருனென்று மேற்கண்ட மனோதத்துவ லட்சண சாஸ்திரிகள் வாதிக்கிருர்கள். மானிட இயல்பை இவ்வளவு கேவலப்பட்டதாகக் கருதுகிற அந்தசாஸ்திரிகளின் அபிப்பிராயத்துக்காக நாம் பரிதாபங் கொள்ளுகிருேம். அப்படிப்பட்ட நற்காரியத்தைச் செய்தால் ஒருவிததிருப்தியும் மகிழ்ச்சியும், அதனைச் செய்யா தொழிந்தவிடத்து ஒருவித அதிருப்தியும் துக்கமும் மனிதனுடைய மனதில் ஏன் தோன்ற வேண்டும் ? அத்தகுதிய நற்காரியத்தைச் செய்தபோது துக்கமும், செய்யா விடத்து மகிழ்ச்சியும் ஏன் மனிதனுடைய மனதில் இயற்கையிலே தோன்றுதல் கூடாது ? முற்கூறிய வண்ணம் தோன்றுவது அவனுக்கு இயற்கை யென்றும், பிற்கூறியவண்ணம் தோன்றுவது அவனுக்கு இயற்கையன்றென்றும் மேற்காட்டிய சாஸ்திரிகள் ஒப்புக்கொள்ள வேண்டிவரும்.

ஆகவே பரோபகாரசிந்தையாகிய தருமகுணம் மனிதனிடத்து இயற்கையிலமைந்து கிடக்கின்றதென்றே ஏற்படுகிறது. அப்படிப்பட்டகுணம் இயற்கையில் மனிதனிடத்துள்ள தென்பதைக் குறித்தும், இல்லதென்பதைக் குறித்தும், அது கேவலம் சுயப்பிரயோசனத்தையே காரணமாகக் கொண்டிருக்கிற தென்பதைக் குறித்தும், அங்ஙனமின்றி அதுதானே உதித்து வேறொன்றின் துணையின்றியே இயங்குகின்றதென்பதைக் குறித்தும் அபிப்பிராயங்கள் பலவாருகப் பேதப்பட்டிருக்கினும், அத்தகுதியகுணம் மனிதனிடத் துண்டென்பதை மாத்திரம் யாவரும் நிராட்சேபனையாய் ஒப்புக்கொள்ளுவார்களென்பதற்கு ஐயமில்லை.

இந்துக்களுக்குள் உதாரகுண சிலர்களென்று பெயரெடுத்த பிரபுக்களெல்லாம் தம்மை வந்தடைந்தவர்கள் எந்தக் காலத்தில் எதைக்கேட்கினும் அவர்களுக்கு அதனை எவ்வளவும் முகஞ் சுளியாது "இன்னுயிரேனுங் கொள்ளுதறிது கொடுப்பது நன்ருல்." என்னும் கோட்பாட்டைக் கடைப்பிடித்து எவ்வகைப்பட்ட பிரதிபலனையும் நாடாது கொடுத்துக்கொண்டு வந்தார்கள். கர்ணன் - மாபலி - சிபி - ததீசி - குமுணன் முதலானோர் வரையாது வழங்கி வள்ளலென்னும் பெயரெய்தப் பெற்றவர்கள். அவர்கள் செய்த அற்புதமான காரியங்கள் அவர்களுடைய சரித்திரத்தால் முறையே விளங்கும். அவற்றை ஈண்டு விரிக்கிற் பெருகும். மறுமைப் பயன் முத

வியவற்றைக் கருதியாவது ஏற்போனிடத்து ஏதோ சில பிரதிபலன் முதலியவற்றை எண்ணியாவது ஒருபொருளை ஈதல் எவ்வளவும் ஈகையாகமாட்டாது. அதை ஒருவித வர்த்தக மென்றே ஆன்றோர் திரஸ்காரஞ் செய்துளார். அது எவ்வளவும் தரும சிந்தையின் காரியமாகாது.

"வறியார்க் கொன்றீதலே யீகை மற்றெல்லாங்
குறியெதிர்ப்பை நீரதுடைத்து."

என்றார் தெய்வப் புலவர்.

தருமசிந்தையின் பயனாகிய ஈகையைக்குறித்து விசேஷமாகக் கூறிய பெரியோர் ஏற்பதைக்குறித்து இழிவாகப் பேசியுளார். "ஏற்பதிகழ்ச்சி." "ஐயமிட்டுண்." என்னும் இரண்டு அற்புத வாக்கியங்கள் அடுத்தடுத்து அமைக்கப் பட்டிருக்கின்றன. இவை ஒன்றுக்கொன்று முரண்படுகிறதாகச் சிலர் மயங்குகிறார்கள். இம்மயக்கத்தால் விளைந்த விபரீதம் அம்மம்ம பெரிது பெரிது. "ஏற்பதிகழ்ச்சி." என்னும் வாக்கியத்தின் உண்மையைக்கடைப்பிடித்தளவனும் ஏற்காதிருந்தால் மற்றொருவன் ஐயமிட்டு உண்ணுவது எப்படி? என்றுதர்க்கித்து மேலைய இரண்டு வாக்கியங்களுக்குள் ஒன்றை மனங் கூசாது சில கனவான்கள் எடுத்து விட்டார்கள்.

"நல்லாறெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று."

நற்காரியத்தை உத்தேசித்தாலும் ஒருவனை அடுத்து அவரிடத் தொன்றை ஏற்பது தீது என்றும், ஒருவன் மறுமைப்பயன் முதலியவற்றில் நம்பிக்கையற்ற நாஸ்திகனாயிருக்கினும் பிறருக்கு ஈதலே நன்று என்றும் பொருள்பட தெய்வப்புலவர் ஒரு குறட்பாவிலேயே கூறிய கட்டளைகளும் முரண்படுகின்றன வென்று கருதி மேற்கண்ட கனவான்கள் அதின் ஓர்பாகத்தை எடுத்து விடுவார்கள் போலும். ஈகை பரோபகாரசிந்தையை எந்நாளும் வளர்க்கும் தாயாகையால் அதை மேலோர் அதிகமாய்ச் சிறப்பித்தார்கள். உதார குணமுள்ள ஒருவனை மற்றொருவன் ஒருபொருளை யாசிக்கையில் அது அவனிடத்திலில்லாவிடத்து அவன் படுகின்ற துன்பத்தை இவ்வளவு அவ்வளவு என்று ஒருவராலும் சொல்ல ஒண்ணாது.

(இன்னும்வரும்.)

PRINTED AT THE ALBINION PRESS,—MADRAS.